


பட்டுக்கோட்டையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பயிற்சி கூட்டம். கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என். நேரு தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் கோவி.செழியன், தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் T. பழனிவேல், மாவட்ட கழக அவைத்தலைவர் சுப. சேகர், முரசொலி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் கா. அண்ணாதுரை, நா. அசோக்குமார், காமராஜ், சரவணன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக் கூடத்தில் 17.11.2025 அன்று நடைபெற்ற 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, சேகோசர்வ் மேலாண் இயக்குநர் திருமதி ஆர். கீர்த்திபிரியதர்ஷினி, ஆவின் பொது மேலாளர் ப.குமரேசன், குழந்தைவேலு, க.ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

## அரியலூர் மாவட்டத்தில் கூட்டுறவு வார விழாவில்

# 576 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர்,நவ,20-

அரியலூர் மாவட்டம், அரியலூர் தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் "கூட்டுறவு தொழில் முனைவு மூலம் இளைஞர்கள், பெண்கள் மற்றும் பலவீனமான துறைகளை (கைவினைப்பொருட்கள், கைத்தறி, தொழிலாளர், மீன்வளம் போன்றவை) மேம்படுத்துதல்" எனும் மையக் கருத்துடன் நடைபெற்ற 72வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, 576 பயனாளிகளுக்கு ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் கூட்டுறவு துறையின் மூலமாக முதலமைச்சரின் தாயுமானவர் திட்டமானது மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. வயது முதிர்ந்தோர்கள் நியாய விலைக்கடைகளுக்கு சென்று உணவுப் பொருட்கள் வாங்கி வருவதில் சிரமம் ஏற்படுகிறது என்பதை அறிந்து அவர்களின் இல்லங்களுக்கே பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவில் வேறு எந்தவொரு மாநிலத்திலும் இல்லாத வகையில் இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி உள்ளார்கள். கூட்டுறவுத்துறை என்பது ஓர் உயிர்நாடி துறையாக இருக்கிறது. பல்வேறு அரசுத்துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து சிறப்பாக வழிநடத்துவதற்கு உதவுகின்ற துறையாகத்தான் கூட்டுறவுத்துறை விளங்குகிறது.

கூட்டுறவுத்துறையின் மூலமாக ஒவ்வொரு ஆண்டும் வட்டியில்லா பயிர்கடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருவதன் காரணமாக விவசாய தொழிலில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. கைத்தறி துறையின் சார்பாக நெசவாளர்களுக்கு கடனுதவிகள், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் டாப்செட்கோ கடனுதவிகள், சிறுபான்மையினர்களுக்கு டாம்கோ கடனுதவிகளும், உச்சபட்சமாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அவர்களின் வாழ்வில் பொருளதார முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் வகையில் கடனுதவிகள் என அனைத்தும் கூட்டுறவுத்துறையின் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அரசு சிறப்பாக செயல்படுவதற்கு ஒரு மையமாக கூட்டுறவுத் துறையானது செயல்பட்டு வருகிறது.

இத்துறையில் பணியாற்றுகின்ற ஒவ்வொருவரின் பணிகளும் மிகவும் முக்கியமாகும். அந்த வகையில் சிறப்பாக பணியாற்றும் கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக பணியாற்றிய அலுவலர்களை சிறப்பிக்கும் வகையிலும், வருங்காலங்களில் மேலும் சிறப்பாக பணியாற்றிட ஊக்குவிக்கும் வகையில் இவ்விழாவானது நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தபடாத பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். கடந்த மாதத்தில் சென்னையில் நடைபெற்ற கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தெலுங்கானா மாநில முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக்கு அளிக்கின்ற முக்கியத்துவத்தை அறிந்து தெலுங்கானா மாநிலத்திலும் தமிழ்நாட்டை பின்பற்றி காலை உணவுத்திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்தார். இதே போன்று பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்களும் காலை உணவுத்திட்டத்தினை செயல்படுத்த போவதாக அறிவித்திருக்கிறார். போக்குவரத்து துறை தொடர்பான கூட்டங்களில் கலந்து கொள்ளும் பொருட்டு டெல்லி போன்ற இடங்களுக்கு செல்லும் போது அக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அறிந்து கொள்வதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ள கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டமானது மற்ற மாநிலங்களில் தேர்தல் வாக்குறுதிகளில் அறிவிக்கப்படும் திட்டங்களில் முதன்மையான திட்டமாக உள்ளது. அனைவருக்கும் வழிகாட்டும் முதலமைச்சராக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திகழ்கிறார். மேலும் சிறப்பாக செயல்பட்டு கூட்டுறவு துறைக்கும், அத்துறையில் சிறப்பாக பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும், இவ்விழாவில் 384 பயனாளிகளுக்கு ரூ.3.29 கோடி மதிப்பில் பயிர்கடனுதவிகளும், 133 பயனாளிகளுக்கு ரூ.54 இலட்சம் மதிப்பில் கால்நடைப் பராமரிப்பு கடனுதவிகளும், 54 பயனாளிகளுக்கு ரூ.5.59 கோடி மதிப்பில் மகளிர் சுய உதவிக்குழு கடனுதவிகளும், 01 மாற்றுத்திறன் பயனாளிக்கு ரூ.50,000 மதிப்பில் கடனுதவிகளும், 02 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சம் மதிப்பில் தாட்கோ கடனுதவிகளும், 02 பயனாளிகளுக்கு ரூ.1.5 இலட்சம் மதிப்பில் சிறு வணிகக் கடனுதவிகளும் என மொத்தம் 576 பயனாளிகளுக்கு ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

தொடர்ந்து கூட்டுறவு வார விழாவில் சிறப்பாக பணியாற்றிய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, நகர கூட்டுறவு வங்கி, கைத்தறி மற்றும் நெசவாளர் கூட்டுறவு கடன் சங்கங்கள், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள், கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அதிக மதிப்பெண் பெற்ற (10 ஆம் வகுப்பு) சங்கப் பணியாளர்களின் குழந்தைகளுக்கும், பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப்போட்டி, கதை சொல்லுதல் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கேடயங்கள் மற்றும் பரிசுகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். முன்னதாக 72வது அகில இந்திய கூட்டுறவு வார விழா உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்விழாவில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் மா.உமாமகேஸ்வரி அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், கூட்டுறவுச் சங்கங்களின் சரகத் துணைப்பதிவாளர் சை.அ. மீர் அஹசன் முசபர் இம்தியாஸ், துணைப்பதிவாளர், பொது விநியோத் திட்டம் க.சாய் நந்தினி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. கென்னடி, மா.அன்பழகன், ஆர்.கலியபெருமாள், நகர கழக செயலாளர் இரா. முருகேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், கூட்டுறவுத் துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்களின் பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் மாநகராட்சி, மண்டலம் 1க்குட்பட்ட வாங்கப்பாளையம், குளத்துப்பாளையம் திறந்த வெளி கிணறுக்கு நீரில் மூழ்கக்கூடிய பம்பு செட்டை வழங்கி இயக்கி, சோதனை செய்தல், பேனல் மற்றும் மோட்டாரை மேலமாயனுரில் அமைத்தல், வாங்கல் குளத்துப்பாளையத்தில் வால்வுகள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், ஆணையர் கேஎம்.சுதா, எஸ்.பி.கனகராஜ், ஆர்எஸ். ராஜா, வெங்கமேடு சக்தி வேல், அன்பரசு, உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




நாகை மாவட்டம், நாகையில் நடைபெற்ற கூட்டுறவுத் துறையின் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார். உடன் கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி, நாகூர் நகரக் கழக செயலாளர் எம்.ஆர்.செந்தில்குமார் வேதாரணியம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் என்.சதாசிவம் மற்றும் பலர் உள்ளனர்.

## திரு.வி.க. நகரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்!

சென்னை, நவ. 20–

திரு.வி.க நகர் தொகுதி வார்டு எண், 73 மற்றும் 76அ ஆகிய பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான மையங்களில் வழக்கறிஞர் ப. தாயகம்கவி, எம்.எல்.ஏ., தொகுதி தேர்தல் பார்வையாளர் தண்டலம் என்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பொதுமக்களிடம் பெறப்பட்ட வாக்காளர் சேர்ப்பு படிவங்களை நேரில் சென்று பார்வையிட்டனர். இதில் எம்.தமீம்பாய், மூவேந்தன், குலாப், முருகன் முன்னாபாய் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பால் நினைந்தூட்டும் தாயினுஞ்சாலப் பரிந்து நிற்கிறார்!



சங்கராபுரம் அருகே
தாய் தந்தையரை இழந்துபோன
நான்கு குழந்தைகளை
அரசே ஏற்றுக்கொள்ளும்
என்ற அறிவிப்பு
முதல்வர் மு.க.ஸ்டாலின் மீதுள்ள
சமூக மதிப்பை
மேலும் மேலும் உயர்த்தியிருக்கிறது

அரசாங்கம் என்பது
ஒரு நிறுவனமே ஆயினும்
அது ஈரமும் இதயமும் அற்ற
எந்திரமல்ல

ஒரு குடும்பத்திற்கான
குணக்கூறுகள்
உடையது என்பதற்கு
சாட்சி சொல்லும் ஆட்சியாளராக
முதல்வர் சிறந்து நிற்கிறார்;
பால் நினைந்தூட்டும்
தாயினுஞ்சாலப் பரிந்து நிற்கிறார்

"காற்றடித்தால்
அவன் வீடாவான்;
கடுமழையில்
அவன் குடையாவான்;
ஆற்றாதழுதால்
அழுத கண்ணீரை
அங்கே துடைக்கும் கையாவான்"
என்று கண்ணனுக்கு
எழுதிய பாட்டு வரிகள்
முதல்வர் என்ற அண்ணனுக்கும் பொருந்தும்

மக்கள் இந்த அறச்செயலை
மறக்க மாட்டார்கள்;
நெகிழ்ந்து புகழ்ந்து
மகிழ்கிறார்கள்

தொடரட்டும் நல்லாட்சி



**- கவிப்பேரரசு வைரமுத்து**



புதுக்கோட்டை தெற்கு மாநகரத்தில் அண்மையில் உடல்நலக்குறைவு காரணமாக மறைவெய்திய கழக செயல்வீரர் 7வது வட்டக் கழக செயலாளர் கழக முன்னோடி செல்வம் அவர்களின் படத்திறப்பு விழா அவரது இல்லத்தில் 17/11/2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக இலக்கிய அணி துணை தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், அன்னாரது படத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா தலைமையிலும் , புதுக்கோட்டை தெற்கு மாநகர திமுக பொறுப்பாளர் வே.ராஜேஷ் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, மேயர் திலகவதி செந்தில், மாநகர அவைத் தலைவர் அ.ரெத்தினம், பாலகிருஷ்ணன், மாநகர திமுக நிர்வாகிகள், 7வது வட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.